[2010 நவம்பர் 12

(ஊ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு, 2010

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2010). 28-7-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை நிராகரிப்பது குறித்து திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் கொண்டுவந்துள்ள தீர்மானத்தை முன்மொழியலாம்.*

***திரு. செ.ம. வேலுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"28-7-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண் 2/2010) இப்பேரவை நிராகரிக்கின்றது"

என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

திரு. கு. பாண்டுரங்கன்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்கள் முன்மொழிந்த தீர்மானத்தை நான் வழிமொழிகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் தன் தீர்மானத்தை முன்மொழியலாம்.*

***மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் *அவர்களே,*

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2010)@ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

@ 10–11–2010 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

2010 நவம்பர் 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ.ம. வேலுசாமி அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. திரு. செ.ம. வேலுசாமி. (குறுக்கீடு) திரு. பொள்ளாச்சி ஜெயராமன், பேசுங்கள்.

பிற்பகல் 1-25

திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'நடக்கும் என்பார் நடக்காது, நடக்காதென்பார் நடந்து விடும்'. இவை கவிஞர் கண்ணதாசனுடைய வரிகள். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்றதிலிருந்து கூட்டுறவுச் சங்கத்திற்குத் தேர்தல் வரும், வரும் என்று சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால் ஆறு மாத காலத்திற்கு ஒருமுறை கூட்டுறவுச் சங்கத் தேர்தலைத் தள்ளி வைப்பதற்கான தீர்மானம் மட்டும் தவறாமல் வந்து கொண்டிருக்கிறது. வடிவேலு ஜோக்கில் சொன்ன மாதிரி 'வரும், ஆனால் வராது'. எப்போதுதான் வரும் என்று எங்களுக்குத் தெரியாது; இந்த ஆட்சியிலே கூட்டுறவுச் சங்கத்திற்கு தேர்தல் எப்போதுதான் வரும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. அதாவது பொத்தாம்பொதுவாக அமைச்சர் அவர்கள் 6 மாதத்திற்கு ஒருமுறை இந்தத் தேர்தலைத் தள்ளி வைத்துக் கொண்டிருப்பதிலே நோக்கமாக இருக்கிறாரே தவிர, உண்மையிலேயே ஆராயப் போனால் இந்தத் தேர்தலை நடத்தி, கூட்டுறவுச் சங்கங்கள் முறைப்படுத்தப்பட்டு அதனுடைய பயன் மக்களுக்கு நேரிடையாகப் போய்ச் சேர்ந்துவிடக் கூடாது என்கிற நோக்கத்திலும், உங்களுடைய கட்சிக்காரர்கள் இந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் தனி அதிகாரிகள் இருக்கிற காலத்தில், நல்லமுறையிலே அனுபவித்துக் கொள்ளவேண்டுமென்பதற்காக எப்பொழுதும் இதையே நீங்கள் சொல்லிக்கொண்டு இருக்காமல், விரைவில் நல்ல முறையில் சட்டங்களை நிறைவேற்றி கூட்டுறவுச் சங்கத்தில் ஜனநாயக ரீதியாக கூட்டுறவாளர்களே பங்கேற்கத்தக்க வகையில் கூட்டுறவுச் சங்கத்திற்கான தேர்தலை நீங்கள் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் கூட்டுறவுத் துறை அமைச்சராக 5 ஆண்டுகாலம் இருந்திருக்கிறார். 1977 ஆம் ஆண்டு திரு. எம்.ஜி.ஆர். அவர்கள்

[திரு. கே.என் நேரு] [2010 நவம்பர் 12

முதலமைச்சராக இருந்தார். அ.தி.மு.க. ஆட்சி தொடங்கியது. அவர் ஒரு 10 வருடங்கள், அதற்கு பிறகு முன்னாள் முதலமைச்சராக இருந்தவர் 10 வருடங்கள் ஆண்டனர். 20 வருடங்களிலே என்றைக்காவது இந்தத் தேர்தலைப் பற்றி நீங்கள் சிந்தித்து இருக்கிறீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி). வேறு யாராவது கேட்கலாம், நீங்கள் இதைக் கேட்கலாமா? கேட்கக்கூடாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "28-7-2010 ஆம் நாளன்று மேதகு ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்த அவசரச் சட்டத்தை இப்பேரவை நிராகரிக்கின்றது" என்னும் திரு. செ.ம. வேலுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், தீர்மானம் தோல்வியுற்றது.

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2010) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

2010 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

பிரிவுகள் 2 மற்றும் சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2010 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) இரண்டாம் திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 31/2010) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.